# காளிப்பட்டி மஹேந்ரா கல்லூரி பட்டமளிப்பு விழா

By DIN | Published on : 12th June 2018 09:29 AM | அ+ அ அ- |

மாணவர்கள் நூல்களை நாள்தோறும் தவறாமல் படிப்பது சிந்தனையை தூண்டுவதுடன், புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமாக அமையும் என சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் பி.கொழந்தைவேல் குறிப்பிட்டார்.

காளிப்பட்டி மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில் மஹேந்ரா கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஜி.பாரத்குமார் தலைமை வகித்தார். இவ்விழாவில் சேலம் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி.கொழந்தைவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரியில் 2016-2017 ஆம் கல்வியாண்டில் இளநிலை, முதுநிலை, ஆய்வியல் நிறைஞர் பட்டம் பயின்ற 700-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், சிறப்புத் தகுதியுடன் முதல் தரம் பெற்ற மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கி பேசினார். விழாவில் அவர் மேலும் பேசியது:

நாள்தோறும் நூல்களைத் தவறாமல் படிக்க வேண்டும். எந்தவொரு நூலையும் முழுமையாகப் படித்தால்தான் புதிய புதிய சிந்தனைகள் தோன்றி ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகளை உருவாக்க முடியும். உங்கள் எண்ணங்கள் உயர உயர நீங்களும் உயர்வீர்கள். இன்றைய சூழலில் கலை அறிவியல் பயிலும் மாணவர்களுக்கு வெளிநாடுகளிலும், உள்நாட்டில் பல்வேறு மாநிலங்களிலும் ஏராளமான வேலைவாய்ப்புகள்
காத்துக்கிடக்கின்றன.

அதனை நன்கு உணர்ந்து மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதுடன், உயர்கல்வியும் பெற்றுத் தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும், பயின்ற கல்லூரிக்கும், நம்முடைய நாட்டிற்கும் பெருமை தேடித் தந்து நல்ல குடிமக்களாய் திகழ வேண்டும். உலக அளவில் ஆராய்ச்சிப் படிப்புகள் மேற்கொள்ள பல்கலைக்கழகங்கள் நிதியுதவியை அளிக்கின்றன.

அதனை மாணவர்கள் அறிந்து ஆய்வுத் துறையில் சிறந்து விளங்கி, பல புதியகண்டுபிடிப்புக்களை வழங்கி நம் நாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றுவதுடன், சேவை மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும் என்றார்.

முன்னதாகக் கல்லூரியின் முதல்வர் முனைவர்.சு.அர்ஜுனன் இவ்விழாவில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார்.

இவ்விழாவில் மஹேந்ரா கல்வி நிறுவனங்களின் செயலர் ப. வள்ளியம்மாள், மேலாண் இயக்குநர்கள் பா.மஹேந்திரன், பா.மகா அஜய்பிரசாத், செயல் இயக்குநர் முனைவர் ஆர்.சாம்சன்ரவீந்திரன், இயக்குநர் ந.சம்பத், தேர்வாணையர் செ.குமரவேல் உள்ளிட்ட துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

**மேலும் செய்திகளை உடனுக்குடன் படிக்க, தினமணி மொபைல் ஆப்-ஐ இங்கே கிளிக் செய்து தரவிறக்கம் செய்துகொள்ளுங்கள்!**